# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஜனவரி 24, 2026 Weekly E-paper • January 24, 2026





# இருபது ஆண்டுகள் - இடைவிடாத பயணம்!

சுப. வீரபாண்டியன்

## ஸ்டாலின் தொடரட்டும்! தமிழ்நாடு வெல்லட்டும்!

நெல்லை பாபு

## ஸ்டாலின் ஆட்சியைப் புகழ்ந்த மோடி!

தலையங்கம்

## திரைப்படமும் தீர்வும்! ‘பராசக்தி’

வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஜனவரி 24, 2026 Weekly E-paper ● January 24, 2026


# இருபது ஆண்டுகள் - இடைவிடாத பயணம்!

## சுப. வீரபாண்டியன்

2006 ஆம் ஆண்டு, தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில், நாம் திமுகவை ஆதரிக்க வேண்டும் என்னும் என் முன்மொழிவு ஏற்கப்படாத நிலையில், தமிழர் தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் பொறுப்பில் இருந்தும், அடிப்படை உறுப்பினர் என்னும் நிலையிலிருந்தும் நான் விலகி வெளியே வந்தேன்! அன்று மாலை வெளிவந்த நாளேடுகளில் அந்தச் செய்தி வெளியானதைப் பார்த்துவிட்டு, நக்கீரன் இதழின் ஆசிரியர் நண்பர் கோபால் என்னைத் தொடர்பு கொண்டார். அடுத்த நாள் காலையில் தலைவர் கலைஞர் அவர்களைக் கோபாலபுரம் இல்லத்தில் சந்திக்கும் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தார்!




என் பொதுவாழ்வில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது !

அந்த ஆண்டின் (2006) இறுதியில், திராவிட இயக்கத்தின் வரலாற்றையும், கருத்தியலையும் ஏற்றுக்கொண்டு, ஒரு தமிழர் அமைப்பை ஏற்படுத்த நானும், நண்பர்கள் சிலரும் முடிவு செய்தோம் !

தலைவர் கலைஞர் அவர்களின் வாழ்த்துகளுடன், "திராவிட இயக்கத் தமிழர் பேரவை" என்னும் புதிய அமைப்பு, 22.01 .2007 அன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில்,இனமான பேராசிரியர் ஐயா அன்பழகன் அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டது !

பேரவையின் அவைத் தலைவராக மறைந்த அய்யா கயல் தினகரன் அவர்களும், பொதுச் செயலாளராக நானும், பொருளாளராகத் திரைப்பட இயக்குனர் செல்வபாரதி அவர்களும் பொறுப்பேற்றோம். திமுகவில் பணியாற்றி வந்த தோழர்கள் பொள்ளாச்சி உமாபதி, சாவல் பூண்டி சுந்தரேசன் உள்ளிட்ட பலரும் இரட்டை உறுப்பினர் அடிப்படையில் பேரவையில் இணைந்தனர் !

19 ஆண்டுகள் பறந்தோடி விட்டன! இயன்றதைச் செய்வோம், இடைவிடாமல் செய்வோம் என்னும் எண்ணத்தைத் தாங்கிப் பிடித்து, இருபதாம் ஆண்டில் இன்று அடியெடுத்து வைக்கின்றோம்.

பாலினச் சமத்துவம் உள்ளிட்ட அனைத்து சமத்துவக் கோட்பாடுகளையும், சமூக நீதி, தமிழ் இன மொழி உணர்வு, பகுத்தறிவு ஆகிய திராவிடக் கருத்தியலை மக்களிடம் பரப்புவதும், சட்டமன்ற - நாடாளுமன்றத் தேர்தல்களில் திமுகவையும், அதன் கூட்டணியையும் ஆதரித்துப் பரப்புரை செய்வதும் பேரவையின் தொடர் செயல்பாடுகள் என்று கூறலாம் !

திராவிடக் கருத்தியலைப் பரப்புவதற்குப் பல்வேறு வடிவங்களை நாங்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டோம்! அவற்றைத் தொடர்ந்து பின்பற்றியும் வருகிறோம்!

2007 – கருஞ்சட்டைத் தமிழர் (மாத இதழ் – இப்போது வார மின்னிதழ்)

2011. திராவிடம் 100 (You Tube)

2018 – கருஞ்சட்டைப் பதிப்பகம்

2019 – இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம்

2020 – திராவிடப் பள்ளி

2021 – கல்வி உதவித் திட்டம்

2022 – திராவிட நட்புக் கழகம்

2024 – திராவிட முழக்கம் (மாத இதழ்)

ஒவ்வொரு பிரிவையும், பேரவையின் சார்பில் ஒவ்வொரு குழுவினர், பாதுகாத்து – வளர்த்து வருகின்றனர்!

கருஞ்சட்டைத் தமிழர் மாத இதழை 2007 ஜூலை மாதம் இன்றைய முதலமைச்சர் தளபதி அவர்கள் வெளியிட்டுத் தொடக்கி வைத்தார்!

2011 இல் தொடங்கப்பட்ட திராவிடம் 100 வலையொளி ஓரிரு ஆயிரம் பார்வையாளர்களுடன் தொடங்கப்பட்டது. இன்று 2,13,000 பேர் பின்பற்றுகின்றனர் (subscribers). இன்று வரையில் 3300 காணொளிகள் ஒளிபரப்பப்பட்டுள்ளன. கடந்த 15 ஆண்டுகளில் திராவிடம் 100 காணொளிகளைப் பார்த்தவர்களின் எண்ணிக்கை 5 கோடிக்கும் மேல் (5,22,53,944) என்பது எங்களுக்கே வியப்பும் மகிழ்ச்சியும் தருகிற செய்தியாக உள்ளது!

2018 நவம்பரில், மேடை முழுவதும் பெண்கள் மட்டுமே அமர்ந்திருக்க, தொடங்கப்பட்ட கருஞ்சட்டைப் பதிப்பகம் இதுவரை 167 நூல்களைக் கொண்டு வந்திருக்கிறது! 2019 ஆம் ஆண்டு முதல், சென்னை புத்தகக் கண்காட்சியிலும், வேறு சில மாவட்டக் கண்காட்சிகளிலும் இடம்பெற்றிருக்கிறது!

இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம், கருஞ்சட்டைப் பதிப்பக நூல்களை மட்டுமின்றி, திராவிட கருத்துகளைக் கொண்ட பல்வேறு

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

## முன்பக்கத் தொடர்ச்சி...

பதிப்பகங்களின் நூல்களையும் தமிழ்நாட்டின் பல ஊர்களிலும் அறிமுகம் செய்துள்ளது.

திராவிடப் பள்ளி – நாங்கள் பெருமையோடு சொல்லிக் கொள்ளத்தக்க ஒரு நிறுவனம் ! இதனையும், இருள் சூழ்ந்த கொரோனா காலத்தில், கழகத்தின் தலைவர், மாண்புமிகு இன்றைய முதலமைச்சர் அவர்கள்தான் அன்று தொடக்கி வைத்தார். அது அய்யா பெரியாரின் பிறந்த நாளான 2020 செப்டம்பர் 17.

திராவிட இயக்க வரலாறு, திராவிடக் கருத்தியல் கோட்பாடு, திராவிட இயக்கம் இங்கு ஏற்படுத்தி உள்ள தாக்கம் என மூன்று பிரிவுகளின் கீழ், பாடங்கள் அஞ்சல் வழியில் நடத்தப்படுகின்றன! மாதம் இரு முறை இணையவழி வகுப்புகளும் நடக்கின்றன!

சென்ற ஆண்டு வரையில் படித்து முடித்த மாணவர்கள் – 2264 பேர் !

இவ்வாண்டு 710 பேர் !

ஆக மொத்தம் – 2974 பேர்! இவர்களுள்

பெண்கள் – 893 பேர் / ஆண்கள் 2081 பேர் |

சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா, ஹாங்காங், தென்கொரியா, தென் ஆப்பிரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா, கனடா என்று 20 வெளிநாடுகளில் இருந்து 76 பேர் படித்து முடித்துள்ளனர்.

2021 ஆம் ஆண்டு, ஒடுக்கப்பட்ட – குறிப்பாக – பட்டியலின மாணவர்களுக்குக் கல்வி உதவித் திட்டம் என ஒன்றை தொடங்கினோம். 9 மாணவர்களோடு தொடங்கிய அந்தத் திட்டத்தில் இன்று 91 மாணவர்கள் பயனடைகின்றனர்.

கடவுள், மத மறுப்பு என்பது பேரவையின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று என்பதால், அந்த நம்பிக்கைகள் கொண்ட, அதே வேளையில் சமூக நீதியிலும் ஊற்றம் மிகுந்த தோழர்கள் நம்மோடு சேர்ந்து பயணிக்க இயலாமல் போயிற்று! அவர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் 2022 ஆம் ஆண்டு, கன்னியாகுமரியில் திராவிட நட்புக் கழகம் என்னும் ஓர் இணை அமைப்பை உருவாக்கினோம்! அந்த அமைப்பும், இன்று பரவலாகப் பலரையும் சென்றடைந்திருக்கிறது!

கருஞ்சட்டைத் தமிழர் இதழை மின்னிதழாக மாற்றி விட்ட பிறகு, அச்சு வடிவில் ஒரு மாத இதழ் வேண்டும் என்று பேரவையின் பொதுக்குழு கருதியது ! அதனை ஏற்று, 2024 ஜனவரி முதல் தேதி அன்று திராவிட முழக்கம் என்னும் மாத இதழைத் தொடங்கினோம். இன்று வரை 25 இதழ்கள் வெளிவந்துள்ளன. ஒரு மாதம் கூட ஒரு நாள் கூட காலத்தாழ்வின்றி, திராவிட முழக்கம் வந்து கொண்டிருக்கிறது!

இவைகளையெல்லாம், எங்களின் சாதனைப் பட்டியலாக இங்கு நான் வெளியிடவில்லை. திராவிட இயக்கத்தின் நீண்ட நெடிய சமூகப் பயணத்தில், நாங்களும் சிறு பங்காற்றி இருக்கிறோம் என்பதைப் பதிவு செய்வதே நோக்கம் !

இன்னும், இன்னும் இயன்றதைச் செய்வோம் ! இடைவிடாமல் செய்வோம் ! நீங்களும் வாருங்கள், சேர்ந்து பயணிப்போம்! ●

*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஸ்டாலின் ஆட்சியைப் புகழ்ந்த மோடி!

கோயிலின் சுவரில் சாய்ந்து கொண்டு சில ஆண்டிகள், அவர்களுக்காக ஒரு மிகப்பெரிய மடம் கட்டுவதற்காக விடியவிடிய பேசிக்கொண்டு இருந்தார்கள். பொழுது விடிந்தது. ஆளுக்கொரு பிச்சைப்பாத்திரத்தைத் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டார்கள். பாவம் அவர்கள் வயிற்றுப் பிழைப்பு அது.

23-01-2026, மதுராந்தகத்தில் திமுக அரசை விரட்டிவிட்டு ஆட்சி அமைக்கப் போவதாக என்டிஏ கூட்டணி கூட்டம் நடைபெற்றது.

திமுக தயவால் ஒன்றிய அமைச்சரான அன்புமணி, தன்னால் 'துரோகி' என்றுதூற்றப்பட்டஎடப்பாடியிடம்சரணடைந்ததடி.டி.வி.தினகரன்,உள்ளிட்ட அரசியல் மேதாவிகள் திமுகவை ஊழல் கட்சி-குடும்ப வாரிசு கட்சி, எனவே திமுகவை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்று, எடப்பாடியைப் போலவே பேசித் தள்ளி விட்டார்கள், போங்கள்.

ஆனால் மக்கள் நலன், திமுக அரசு செய்யத் தவறியதிட்டங்கள், ஆட்சியைப் பிடித்து அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள், என்னென்ன திட்டங்கள் வைத்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி யாரும் ஒன்றும் பேசவில்லை, பார்த்தீர்களா!

மோடி மட்டும் ஓர் உண்மையை, அவர் அறியாமலேயே பேசிவிட்டார், பாவம். அதாவது 'தமிழ்நாடு கோயில், அறிவியல் இன்னபிற துறைகளில் எல்லாம் முன்னேறி, வளர்ந்து விட்டது. அது போல இந்தியாவும் தமிழ்நாட்டைப் பின்பற்றி இனி முன்னேறிவிடும்' என்று மதுராந்தகக் கூட்டத்தில் பேசி தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலினைப் பாராட்டிப் புகழ்ந்து தள்ளிவிட்டார்.

அதேநேரம் தமிழ்நாட்டில் 'அதிமுக தலைமையில் ஆட்சி அமையும்' என்றார் எடப்பாடி. மோடியோ 'என்டிஏ கூட்டணி ஆட்சிதான் அமையும்' என்று எடப்பாடி மூஞ்சில் பவுடர் பூசிவிட்டார், பாருங்கள்.

பொத்தாம் பொதுவாக தமிழ்நாட்டிற்கு இத்தனை கோடி தந்தோம், அத்தனை கோடி தந்தோம் என்று தமிழ் மக்களின் காதில் 'பூ'சுற்றிய மோடி, கல்வி நிதி, பேரிடர் நிதி, எய்ம்ஸ் மருத்துவமனை, கோவை – மதுரை மெட்ரோ ரயில் போன்ற, மோடியால் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்ட எந்த ஒன்றைப் பற்றியும் பேசாமல் நழுவியோடிவிட்டார், அவர்.

எப்படியோ, ஆண்டிகள் கூடுவார்கள், மடம் கட்டமாட்டார்கள். உதிக்கப்போகும்

உதயசூரியனைத் தடுக்க இயலாதவர்கள் அவர்கள்!


ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# ஸ்டாலின் தொடரட்டும்! தமிழ்நாடு வெல்லட்டும்!

## நெல்லை பாபு

தமிழகத்தின் திசையெங்கும் " ஸ்டாலின் தொடரட்டும்!தமிழ்நாடு வெல்லட்டும் !" என்ற முழக்கம் விண்ணதிரத் தொடங்கிவிட்டது. அண்ணா அறிவாலயத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் வீற்றிருந்த அதே பீடத்தில் இருந்து திமுகழகத் தலைவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்திருக்கும் போர்ப்பறை எதிரிகளின் நெஞ்சில் இடியென இறங்கியிருக்கிறது.

தமிழக அரசியலில் 2026 சட்டமன்றத் தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ள நிலையில், ஆளுங்கட்சியான திமுக தனது தேர்தல் பணிகளை அதிகாரப்பூர்வமாக முடுக்கிவிட்டுள்ளது. சென்னை அண்ணா அறிவாலயத்தில் 20.01.2026 அன்று திமுக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மாண்புமிகு மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில், வரும் தேர்தலை எதிர்கொள்வதற்கான நான்கு முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.




இந்தத் தீர்மானங்கள் வெறும் அறிவிப்புகள் மட்டுமல்லாது, கட்சியின் அடித்தளத்தை வலுப்படுத்தும் மிகச்சரியான தேர்தல் வியூகங்களாகப் பார்க்கப்படுகின்றன.

2026 சட்டமன்றத் தேர்தல் என்பது வெறும் வாக்குப்பதிவில் வரும் வெற்றி தோல்வி முடிவல்ல. அது ஆரிய மாயைக்கும் திராவிடக் கருத்தியலுக்கும் இடையிலான பண்பாட்டுப் போர்! இந்தப் போரில் வென்று தீர, தலைவர் வகுத்துத் தந்திருக்கும் 'வெற்றி வியூகங்கள் ' இதோ:

### தாய்மார்களின் பேரலை, இல்லம் தோறும் எரியும் திராவிடச் சுடர்!

பெண்மையை அடிமைத்தளையிலிருந்து மீட்டெடுத்தது திராவிட இயக்கம். இன்று, நம் வீட்டுப் பெண்களின் பையில் 'உரிமைத் தொகை'யாகவும், அவர்கள் செல்லும் பேருந்தில் 'விடியல் பயண'மாகவும் நிறைந்திருப்பது தலைவர் ஸ்டாலினின் அன்பும் அக்கறையும். திமுக அரசின் மிக முக்கியமான பலமாகப் பார்க்கப்படுவது மகளிர் நலத்திட்டங்கள். இதனை வாக்குகளாக மாற்றும் நோக்கில் பிப்ரவரி 1 முதல், கழக மகளிரணித் தோழர்கள் வாக்குச்சாவடிக்குப் பத்துபேர் வீடு வீடாகச் சென்று, நம் கழக அரசு மகளிர் மேம்பாட்டிற்கு கொண்டு வந்த திட்டங்கலையெல்லாம் எடுத்துக்கூறி "நம் வீடு ஒளிர்வது உதயசூரியனால் " என்று உணர்வோடு சொல்வார்கள். இது வெறும் வாக்கு சேகரிப்பு அல்ல. நன்றியுணர்வு கொண்ட உள்ளங்களின் அணிவகுப்பு!

### " தமிழ்நாடு தலைகுனியாது": தன்மானப் போரின் தாரக மந்திரம்!

டெல்லியின் ஆதிக்கப் பசிக்குத் தமிழகத்தின் உரிமைகளை ஒருபோதும் தாரை வார்த்துக் கொடுக்கமாட்டோம் என்ற உறுதிமொழியே 'தமிழ்நாடு தலைகுனியாது' எனும் பரப்புரை முழக்கம். பிப்ரவரி மாதம் முழுவதும் தமிழகத்தின் தெருமுனைகள் எங்கும் கழகத்தின் போர்வாள்களாகத் திகழ்கின்ற தலைமைக் கழகப் பேச்சாளர்கள் முழங்கப் போகிறார்கள். நம் மாநிலத்தின் கல்வி உரிமை, மொழி உரிமை, நிதி உரிமையைக் காக்க, தந்தை பெரியாரின் பேரன்களும், பேரறிஞர் அண்ணாவின் தம்பிகளும், கலைஞரின் உடன்பிறப்புகளும், தளபதியின் படைவீரர்களும் களமாடப் போகிறார்கள். அஞ்சாத நெஞ்சத்தோடு தலைவர் இட்டிருக்கும் கட்டளை இது.

### பாசறைப் பயிற்சி, வெற்றியைச் செதுக்கும் வித்தை !

தேர்தல் வெற்றியைத் தீர்மானிப்பதில் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA), தொகுதி அளவிலான ஒருங்கிணைப்பாளர்கள் (BLC) ஆகியோரின் பணி மிக முக்கியமானது. எனவே, தேர்தல் களத்தின் அச்சாணியாய் விளங்கும் வாக்குச்சாவடி முகவர்களுக்கு (BLA) அளிக்கப்படும் பயிற்சி, ஒரு படையெடுப்பிற்கான ஒத்திகை! கழகத்தின் கடைசித் தொண்டன் வரை தலைவரின் வியூகத்தைச் சுமந்து செல்லும் போர் வீரனாக மாற்றும் பட்டறை. களத்தில் விழிப்போடு நின்று, கள்ளத்தனம் செய்பவர்களின் கனவுகளைத் தகர்த்தெறியும் வித்தை அங்குதான் பயிற்றுவிக்கப்படும்.

### திருச்சியில் திருப்புமுனை மாநாடு, சரித்திரத்தின் அடுத்த அத்தியாயம்!

மார்ச் 8... திருச்சி மாநகரில் அலைகடலெனத் திரளப்போகும் அந்தக் காட்சி, 2026 இன் முடிவை இப்போதே எழுதிவிடும்! 'தீரர்கள் கோட்டம்' திருச்சியில் , "ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்" என்ற முழக்கம் எழும்போது, டெல்லி வரை அதன் அதிர்வு எட்டும். அந்த மாநாடு, எதிரிகளின் அஸ்திவாரத்தை ஆட்டும் ஒரு பூகம்பமாக இருக்கும்.

### தலைவரின் வியூகம், ஒரு சரித்திர நாயகனின் சங்கநாதம்!

இந்தத் தீர்மானங்கள் மூலம் திமுக தனது தேர்தல் பாதையைத் தெளிவுபடுத்தியுள்ளது. திட்டங்களை விளக்குவது, பயிற்சி அளிப்பது, பரப்புரை செய்வது மற்றும் பிரம்மாண்ட மாநாடு நடத்துவது என ஒரு முறைப்படுத்தப்பட்ட தேர்தல் வியூகத்தை (Structured Election Strategy) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வகுத்துள்ளார். 2026 இல் மீண்டும் ஆட்சியைத் தக்கவைக்கத் தொண்டர்களை உற்சாகப்படுத்துவதே இக்கூட்டத்தின் ஒட்டுமொத்த சாரமாகும்.

எந்தச் சவாலையும் எதிர்கொள்ளும் அஞ்சாமை, திட்டமிட்டுச் செயலாற்றும் தீர்க்கதரிசனம் இவைதான் நம் தலைவரின் பலம். அவர் வெறும் தேர்தலுக்காக வியூகம் வகுக்கவில்லை. தமிழகத்தின் அடுத்த நூறு ஆண்டு கால அமைதிக்காக அஸ்திவாரம் போடுகிறார்.

உடன்பிறப்புகளே! தோள் தட்டி எழுவோம்! தலைவர் காட்டிய வழியில் அணிவகுப்போம்! எதிர்ப்புகள் பொடிப் பொடியாகும்! 2026 இல் புனித ஜார்ஜ் கோட்டையில் மீண்டும் உதயசூரியன் உதிக்கும்!

ஸ்டாலின் தொடரட்டும்! தமிழ்நாடு வெல்லட்டும்!!

# திரைப்படமும் தீர்வும்! ‘பராசக்தி’

வெற்றிச்செல்வன்

திராவிட இயக்கம் எளிய மக்களைச் சென்றடைவதற்குப் பயன்படுத்திய முக்கியமான வடிவம், நாடகங்கள் மற்றும் திரைப்படங்கள். எழுத்து மற்றும் பேச்சு வடிவிலான பரப்புரைகள் மக்களிடையே ஒரு சாராரைச் சென்றடைந்து கொண்டிருந்த வேளையில், காட்சி வடிவிலான நாடகமும், திரைப்படமும் வெகுமக்களிடையே திராவிட இயக்க அடிப்படைகளைக் கொண்டு சேர்க்கப் பேருதவி புரிந்தன. ஆனாலும் நாளடைவில் இதுபோன்ற முயற்சிகளில் ஒரு தேக்கம் ஏற்பட்டபோதும், ஒன்றிரண்டு திரைப்படங்கள் அவ்வப்போது வெளியாகி வந்தன. திராவிட இயக்கத்தின் போராட்டங்கள் பலவற்றைத் திரைப்படங்களாக ஆவணப்படுத்தாதது ஒரு பின்னடைவே. இதற்கு வணிக ரீதியான திரைப்படங்களே களத்தை முடிவு செய்தது ஒரு முக்கியமான காரணம். இந்நிலையில் 1965ஆம் ஆண்டு நடைபெற்ற மொழிப் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அண்மையில் வெளியாகியுள்ள திரைப்படம் பராசக்தி ஓர் ஆறுதல்.

ஒன்றிய அரசின் இந்தித் திணிப்பால் பொதுமக்களும், மாணவர்களும் பாதிக்கப்படுவதையும், அதனை எதிர்த்து மாணவர்கள் போராட்டக்களம் காண்பதையும் கதையாகக் கொண்டு இத்திரைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பொள்ளாச்சியில் நடந்த படுகொலையையும், ஒன்றிய அரசின் அடக்குமுறையையும் காட்சிப்படுத்தியிருப்பதோடு, மாணவர்கள் கையெழுத்து இயக்கம் மூலம் தீர்வு காண்பதாகவும் கதை முடிகிறது. இறுதிக் காட்சியில், மொழிப் போராட்டத்திற்குப் பின்னர் ஆட்சியில் அமர்ந்த பேரறிஞர் அண்ணா, இருமொழிக் கொள்கையே தமிழ்நாடு அரசின் மொழிக்கொள்கை என்று சட்டப்பேரவையில் அழுத்தந் திருத்தமாக அறிவிக்கிறார்.

தற்காலத்திற்கான திரைப்படத்திற்கே உரிய வணிகரீதியான விஷயங்கள் இடம்பெற்றிருந்தாலும், மொழிப் போராட்டத்தை ஆவணப்படுத்தியிருப்பதற்காகவும், மொழி உரிமையின் அவசியத்தை வலியுறுத்தியிருப்பதற்காகவும் பராசக்தி திரைப்படத்தை வரவேற்கலாம்.

என்றாலும், கையெழுத்துஇயக்கம்ஒருமாநிலத்தின்மொழியுரிமைக்கான தீர்வா என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டியுள்ளது. இந்தியாவில் உள்ள அனைத்து தேசிய இனங்களின் மொழி சார்ந்த உரிமைகளுக்கு எதிரான பிரிவுகளை நமது அரசியலமைப்புச் சட்டம் கொண்டுள்ளது. இந்தியை அலுவல் மொழியாக ஏற்றுக் கொண்டிருப்பதோடு, இந்தியை வளர்ப்பதற்கான உறுப்பையும் அரசியலமைப்புச் சட்டம் கொண்டுள்ளது. அரசியலமைப்பின் 351ஆவது உறுப்பானது பின்வரும் சொற்றொடரைக் கொண்டுள்ளது."It shall be the duty of the Union to promote the




spread and of Hindi language" - அதாவது இந்தியைப் பரப்புவது ஒன்றிய அரசின் கடமையாகும் என்பது இதன் பொருள். இந்தியா போன்ற பல மொழிகள் பேசுகின்ற நாட்டில் ஒரு மொழிக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இவ்வுறுப்பு மொழிச் சமத்துவத்திற்கு, மொழி நிகர்மைக்கும் எதிரானது. இந்த உறுப்பு அரசியலமைப்பில் இடம்பெற்றிருக்கும் வரையில், இந்தியை வளர்ப்பது என்ற பெயரில் ஏதாவது ஒரு வகையில் இந்தித் திணிப்பு நடைபெற்றுக் கொண்டேதான் இருக்கும். எனவே மொழி உரிமைக்கான சரியான தீர்வைக் கொடுக்கும் வகையில் இன்னும் அழுத்தமாக, திரைப்படத்தின் காட்சிகளை அமைத்திருக்கலாம்.

கதாநாயகி வெறும் அலங்காரப் பாத்திரமாகவே அமைக்கப்பட்டிருப்பது திரைக்கதைக்குப் பொருத்தமாக இல்லை. அகில இந்திய இந்தி எதிர்ப்பு அமைப்பின் செயலாளராகத் தன்னை அறிவித்திருக்கும் நாயகி, பெரும்பான்மைக் காட்சிகளில் அதற்கான ஆளுமையை வெளிப்படுத்தவில்லை. கலைஞரின் பராசக்தி நாயகியைப் போன்ற ஓர் ஆளுமையை நாயகியின் கதாபாத்திரத்திற்கு ஏற்படுத்தியிருக்கலாம்.

இந்தித் திணிப்பிற்கு எதிராக அனைத்து மாநிலங்களும் இணைந்து போராட வேண்டும் என்ற இயக்குநரின் கற்பனை பாராட்டத்தக்கது. இதுவரை நடைபெறாவிட்டாலும் இனிமேலாவது அத்தகைய முயற்சி மேற்கொள்ளப்படுவது, இந்தியாவில் தேசிய இனங்களுக்கான பாதுகாப்பினைத் தரும்.

திராவிட இயக்கத்தின் களங்களை ஆவணப்படுத்துவது என்பது நிகழ்கால, வருங்கால தலைமுறைகளுக்கான வரலாற்றை நினைவுபடுத்தும் முயற்சி. அம்முயற்சியில் இப்படம் வெற்றிபெற்றுள்ளது. வணிகரீதியாகவும் இத்திரைப்படம் வரவேற்பைப் பெற்றுள்ளது. இதுபோன்ற திரைப்படங்கள் இன்னும் பல வெளிவருவதற்கு உந்துதலாக இருக்கும்.

●